IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 212 /2012
Deposition of witness for PW1

Name : ராஜா

Father's Name : முருகேசன்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 30 day of January, 2020.

Cross Examination Continuation

24.8.2012 ம் தேதி நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் முருகேசன் அவராகவே தூரியாவிற்கு சென்றடையும் படி உயில் எழுதி வைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். உயிலின் தேதி 31 .3.2010 என்றால் சரிதான். முருகேசன் இறந்த தேதி 12.1.2012 என்றால் சரிதான். எனவே முருகேசன் உயிருடன் இருந்த காலம் வரை எந்த சட்டநடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார் ராணியம்மாள் என்பதை நிரூபிக்க எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும் மேற்படி ராணியம்மாள் இறந்தவிட்டார் என்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், மஞ்சுளாவும் சகோதர, சகோதரி என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மஞ்சுளா திருமணம் ஆனவர் என்ற மேற்படி விவரத்தை பிராதிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.211/2012 வழக்கில் நான் மட்டுந்ததான் ஆஜராகியுள்ளேன் என்றும், நான் தாக்கல் செய்துள்ள வக்காலத்தில் கையெழுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். ஆனால் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என்னுடைய கையெழுத்துடன் ரேகை ஒன்று உள்ளது என்றால் சரிதான்.. அந்த ரேகை யாருடையது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் நிராகரிக்கப்படத்தக்கவை என்றால் சரிதான். எதிர்வழக்குரை பற்றி 3 மற்றும் 4ல் தாவா சொத்து முருகேசனுக்கு எவ்வாறு பாத்திப்பட்டிருந்தது என்ற விவரத்தையும், முருகேசன் இறக்கும் வரை சுவாதீனத்தில் இருந்த விவரத்தையும் ஒப்புக்கொண்டுள்ளேன்

என்றால் சரிதான். நான் குடியிருக்கும் குடியாத்தத்தில் உள்ள பரசுராமபட்டிக்கும், தாவா சொத்து உள்ள இடத்திற்கும் 22 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சி.எஸ்.ஆர். வா.சா.ஆ11 மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்ற விவரத்தை எனது வழக்குரையில், எனது நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை, அதை நான் காவல்நிலையம் சென்று விசாரித்து தெரிந்துகொள்ளவும் இல்லை. சூரியாவும், மூர்த்தியும் 9.10.2012 தேதி லத்தேரி காவல்நிலைய ஆய்வாளருக்கும், வி.ஏ.ஓ. சோலமூர் கிராமம் ஆகியோருக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த ஆவணம் நான் வழக்கு தாக்கல் செய்வதற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்ததாக நான் சொல்வது பொய் என்றும், தாவா சொத்தில் சூரியா மற்றும் மூர்த்திஆகியோர் சுவாதீனத்தில் உள்ளனர் என்றால் சரியல்ல. தாவா சொத்து சூரியாவின் அனுபவத்தில் உள்ளது என்றும், தாவா சொத்திற்கும், முருகேசனுக்கும், எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாவாவில் சொல்லியுள்ளபடி தாவா சொத்தின் சுவாதீனத்தில் நான் இல்லை என்றும், அதை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாவாவில் நான் சொல்லியுள்ளபடி முருகேசன் அவராகவே எழுதி வைத்த உயில் படி சொத்துக்கள் சூரியாவை சேரும் என்றும், மேற்படி தாவா சொத்துக்கள் சட்டவரைப்படி முருகேசனின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் மேற்படி உயிலை பொறுத்து கேள்வி எழுப்ப எனக்கு எந்தவித உரிமையும், முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணத்திற்கும், தாவா சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கறிஞர் அறிவிப்பில் கூறியுள்ள சங்கதிகளுக்கும், தாவாவில் கோரியுள்ள பரிகாரத்திற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லாததால் அதனடிப்படையில் இவ்வழக்கிற்கு வழக்குமூலமே இல்லை ன்றால் சரியல்ல. முருகேசனுக்கு மூர்த்தியின் தாயார் சுலோச்சனம்மாள் மட்டும் மனைவி என்றும், எனக்கும், முருகேசனுக்கும் தாவா சொத்தில் எவ்வித சொத்தில் சம்மந்தம இல்லை என்றால் சரியல்ல. எனவே தவறான சங்கதிகளுடன் தகா்கல செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு

எண். 212/2012 வழக்குகளை தள்ளுபடி செய்யவேண்டும்' என்றால் சரியல்ல. நானும், எனது சகோதரியும் தாவா சொத்தில் அனுபவத்தில் இடைஞ்சல் செய்ய முயன்றதால் மூர்த்தியும், தூரியாவும் தாக்கல் செய்த அ.வ.எண்- 211/2012 செலவு தொகையுடன் தீர்ப்பாகவேண்டும் என்றும், அ.வ.எண்.212/2012 வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.